RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/ irjt224s253

OPEN ACCESS

# இலக்கியங்கள் காட்டும் இல்வாழ்க்கை

**ம. கீதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043 தமிழ்நாடு, இந்தியா

# Life in Literature

**M. Geetha** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author:
geetha_tam@avinuty.ac.in

Received: 15-08-2022
Revised: 20-10-2022
Accepted: 03-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Earlier primitive man wandered around as a nomad. As time and day passed by he began to live permanently in one place. Then customs and civilizations emerged. After some time he formed and lived in a group. Later those groups became his families. Then families as communities and caste groups. Thus came domesticity. Domesticity and asceticism are two eyes for ancient Tamil people. Tamil literature has recorded that one should engage in engage domesticity if one wants to get rid of selfishness and seek the welfare of others. In that way, this article is a way to reveal the good news of domesticity in the home life shown by the Tamil literature. In this article life in Tolkappiyam, life in Kurunthogai, life in Akananuru, life in Natrinai, life in Purananuru, living in the twenty-first century are explored.

**Keywords:** Tolkappiyam, Kurunthogai, Akananuru, Natrinai, Purananuru

## முன்னுரை

நெடுங்காலமாகவே தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கின்றன. மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என்று பிரித்தனர். உள்ளம் சார்ந்த வாழ்வை அக வாழ்க்கை என்றும், வீரம் சார்ந்தபோர், கொடை போன்றவற்றை புறவாழ்க்கை என்றும் பாகுபாடு செய்தனர். அகவாழ்க்கையில் மிக முக்கிய இடத்தைப் பெறுவது அன்பால் ஒன்றுபட்டு தலைவனும் தலைவியும் கூடி வாழ்கின்ற இல்வாழ்க்கையாகும். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற வாக்கிற்கேற்ப இலக்கியங்கள் காட்டும் இல்வாழ்க்கையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியத்தில் இல்வாழ்க்கை

கணவனும் மனைவியும் இனிதாக நடத்துகின்ற இல்லறத்தில் நல்லறங்கள் இயற்றப் பெறல் வேண்டும். வாழ்வின் அடிப்படையாக அமைந்த குறிக்கோள் - அறம், பொருள், இன்பம், என்றும் மூன்றாகும். ஆடவர் பெண்டீரது அன்பு வாழ்க்கையை,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (Ilampuranar, 2015).

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி இருவரும் சேர்ந்து வாழும் நிலை திருமணநிலை ஆகும். இருவருக்குமிடையே பொய்யும், குற்றமும் தோன்றிய பின்னர், திருமணம் என்ற சடங்கு ஆணையும், பெண்ணையும் இணைத்து வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை,

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர்யாத்தனர் காரணம் என்ப”

என்ற நூற்பாவழி அறியப்படும் செய்தியாகும் (Ilampuranar, 2015).

திருமணம் என்ற சடங்கு தோன்றிய கால கட்டத்தில் திருமணம் என்பது ஆண்மகனின் பெற்றோர் அல்லது உறவினர்களும், மணமகளின் பெற்றோர் அல்லது உறவினர்களும் நிச்சயித்து முன்னிலையில் ஆணையும் பெண்ணையும் இணைத்து வைக்கும் நிகழ்வாக அமைந்தது என்பதை,

“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.”

என்ற நூற்பா மூலம் விளக்குகிறார் (Ilampuranar, 2015).

## குறுந்தொகையில் இல்வாழ்க்கை

ஒரு குடும்பத்தில் தலைவனும், தலைவியும் ஒத்த கருத்துடையவர்களாக வாழக்கூடிய தன்மையே மகிழ்ச்சி உடையதாக இருக்கும்.

“மனைஉறை வாழ்க்கை வல்லியாங்கு

மருவியின் இனியவும் உளவோ” (Nagarasan, 2004)

இப்பாடலில் தலைவனுடன் ஒத்துவாழக் கூடிய இல்லற வாழ்வை விட இனிமையானது இவ்வுலகில் வேறில்லை எனத் தலைவி கூறுவதுபோல் அமைந்துள்ளது.

அலுத்துவந்த ஆருயிர் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது மனைவியின் முதற்கடமையாகும். தான் சமைத்ததை இனிது! இனிது! எனக் கணவன் சுவைத் துன்பதைக் கண்டு மனைவி மகிழ்ச்சி அடைவாள் என்பதை,

“தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்

இனிதெனக் கணவ னுண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே”

என்ற குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது (Nagarasan, 2004).

ஆடவர்கள் பொருள் தேடுவதைத் தங்கள் கடமையாகவும், பெண்கள் செம்மையான இல்லற வாழ்வு நடத்துவதைத் தங்கள் கடமையாகவும் கொண்டனர் என்பதை,

“வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க் காடவர் உயிரென”

என்ற பாடல்வழி அறிய முடிகிறது (Nagarasan, 2004).

## அகநானூற்றில் இல்வாழ்க்கை

குடும்பம் ஒரு கோயிலாக மாற வேண்டுமானால் கணவன், மனைவி பிணைப்பு மட்டுமின்றி, நாம் பெறுகின்ற செல்வங்களிலேயே சிறந்த செல்வம் குழந்தைச் செல்வமாகும்.

இவ்வுலக வாழ்வும், மறுவுலக வாழ்வும் வளமடைய குழந்தைப்பேறு அவசியம் என்று எண்ணினர். குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு மறுவுலக வாழ்வும் இல்லை என்று நம்பினர். இதனை,

"இம்மை உலகத்து இசையொடு விளங்கி

மறுமை உலக மும்மறுவின்றி உய்ய" (Jeyabal, 2004)

என்ற பாடலடிகள் மூலம் குழந்தைப்பேறு வேண்டும் என அகநானூறு கூறுகிறது. தலைவியுடன் இல்லறத்தில் அடியெடுத்துவைக்கும் தலைவன் அந்த இல்லறத்தை சிறப்பாக நடத்துவதற்கு பொருள் மிக மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்திருந்தான். தான் பிறரை இறந்து நிற்கவும் கூடாது அதே நேரத்தில் தன்னிடம் வந்து இறந்து நிற்பவர்க்கு இல்லை என்று கூறவும் கூடாது என்ற கொள்கை உடையவனாய் இருந்தான். அதனால் தான்தன் அன்பு மனைவியை பிரிந்து சென்று பல நாள் முயன்று பொருளை ஈட்டியுள்ளான்.

"விசும்புற சிவந்த மாத்தாள் இகனைப்" (Jeyabal, 2004)

என்று தலைவன் பொருளை விட, காதல் மனைவியின் அன்பே முக்கியம் என்று கருதினாலும், பொருளே அறவாழ்க்கைக்கு மிகவும் தேவை என்பதை உணர்ந்து கூறுவதை,

"வருக என்னுதியாயின்

வாரேன் நெஞ்சம் வாய்க்கநின் வினையே"

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது (Jeyabal, 2004).

தந்தையின் செல்வத்தில் வாழ்க்கை நடத்துவது பிறரின் பழிச் சொல்லுக்கும், நகைப்புக்கும் உரியதாகி விடும் என கருதிய தலைவன் இளமையிலேயே வறுமையைப் போக்கும் பொருளை ஈட்டிவைத்துக் கொண்டால் தான் வறியவரின் துயர்போக்கி வளமாக வாழலாம் என்பதை சங்கத் தமிழன் நன்கு உணர்ந்திருந்தான் என்பதை அறிய முடிகின்றது.

## நற்றிணையில் இல்வாழ்க்கை

தலைனும் தலைவியும் இல்லறத்தை நல்லறமாக எண்ணி நடத்துகின்றபோது, அந்த இல்லற வாழ்வில் வறுமை வந்த போதிலும் செம்மையுடன் கடமைகளைச் செய்து மனநிறைவு கொண்டார். தலைவி தனது வீட்டில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்திருந்தாலும் அதனை எண்ணாத வளாய், வறுமையிலும் தலைவனுடன் இணைந்து வாழ்வதையே விரும்பினாள் என்பதை,

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்

கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்

ஒழுகுநீர் நுணங்கறல் போலப்

பொழுதுமறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே" (Parimanam & Balasubramaniyam, 2004)

என்ற பாடலின் வழி அறிய முடிகிறது. மேலும் குடும்ப வறுமையைப் பெற்றோருக்கும் மற்றோருக்கும் புலப்படுத்தாமல் மறைத்து வாழ்வதைப் பெரிதாகக் கருதினார் என்பதைக் காணமுடிகிறது.

இல்வாழ்க்கையை மேற்கொண்ட தலைவன் தலைவியிடையே ஊடல் நேர்கிறது. அவர்களின் ஊடலைத் தீர்ப்பவராக விருந்தினர்தம் இல்லத்திற்கு வருகை புரியும்போது ஊடலை மறந்து இருவரும் விருந்தினரைப் பேணிக் கடமையில் ஈடுபடுவர். ஒரு தலைவன் தங்களது ஊடலைத் தீர்ப்பதற்கு விருந்தினர் எவரேனும் வரமாட்டார்களா என்று ஏங்குவதை,

"எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று

சிறு முள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகம் காண்கம்மே”

என்ற பாடலின் மூலம் அறிய முடிகிறது (Parimanam & Balasubramaniyam, 2004).

## புறநானூற்றில் இல்வாழ்க்கை

தலைவன் தலைவியரிடையே வளரும் காதல் நிலையான தன்மையுடையது. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த இல்லத்தாரை இலக்கியத்தில் காண முடிகிறது. தான் மனைவியிடம் கொடுத்த பணத்திற்கு கணக்கு கேட்டு வழக்கிடும் கணவனாக இல்லாமல்தான் கொண்டுவந்த பொருளை எல்லார்க்கும் பகிர்ந்தளிக்கு மாறுகூறுகின்ற தலைவனை காணமுடிகிறது.

“இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே” (Swaminatha Iyer, 2014)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. தமக்கு உதவி செய்தவர், செய்யாதவர் என்று பாரபட்சம் பாராமல், சுற்றதார்க்கும், பிறருக்கும் என்னையும் கேட்காமல் கொடு என்கிறான் தலைவன், என்னையும் கேட்காமல் கொடு எனும் போது, அடக்கு முறை இல்லாமல் பெண்ணிற்கு முழுசுதந்திரம் கைகொடுக்கும் ஒரு ஆணின் பண்பு வெளிபடுவதோடு அல்லாமல் பெண்மையைப் போற்றும் ஆணின் உள்ளம் தெற்றெனப் புலப்டுகிறது.

பிள்ளைகளைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் அதன் கடமைகளை உணர்ந்தவர்களாக இருந்தனர். அக்கால மக்கள் பிள்ளைகளைக் கல்வி, கேள்விகளில் சிறந்த வர்களாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்தனர். இதனை,

“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கட்னே”

என்ற பாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது (Swaminatha Iyer, 2014).

## நான்மணிக்கடிகையில் இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை என்பது ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழ்வதாகும். அதாவது தனக்காக இல்லாமல் பிறருக்காக வாழ்வது இல்வாழ்க்கை. இல்வாழ்க்கையில் அடிப்படையாகக் கருதப்படுபவள் பெண்ணே ஆவாள். பெண்ணினுடைய குணமே அவ்வீட்டை நல்ல நிலைக்கு கொண்டு செல்லும் என்னும் இக்கருத்தை,

“மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்” (Mathavan, 2001)

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. இல்லத்தில் வருவாய்க்குத்தக்க செலவு இருக்கவேண்டும். அப்படி இருக்கக்கூடிய இல்லற மேதலை சிறந்து விளங்கும் என்றநெறியை,

“வளத்து அனைய, வாழ்வார் வழக்கு” (Mathavan, 2001)

என்ற பாடல் மூலம் குறிப்பிடுகிறது. மேலும் மணந்து கொண்ட கணவருடன் பெண் ஒன்றுபட்டு

வாழ்தல் மிகச் சிறப்பு என்பதை,

“ஒன்று ஊக்கல், பெண்டிர் தொழில் நலம்” (Mathavan, 2001)

இப்பாடலின் வழி ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கையே இல்லறத்தின் சிறப்பு என்பதை வலியுறுத்துகிறது.

## இருபத்தோராம் நூற்றாண்டில் இல்வாழ்க்கை

பண்டைய காலம் தொட்டு இன்று வரை மனித சமுதாயம் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்திருக்கின்றது. குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் அறிவியல் தொழில் நுட்பவளர்ச்சியில் மிகுதியால் உலகம் மிகச்சுருங்கியதாகவே காணப்படுகின்றது. இத்தகைய வளர்ச்சி சமுதாயத்தில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தினாலும் இன்றைய வாழ்க்கையில் பொதுவாகப் பெறும் பாலான மனிதர்களிடம் போலித்தனத்தை காண முடிகின்றது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிவாழும் வாழ்கையை வாழ்கிறார்கள். மனிதப் பிறவியின் மகத்துவத்தை இன்றைய கலாச்சாரச் சூழல் சூட்டிப்படைக்கின்றது. ஆடம்பர வாழ்கையினால் மனித மனம் அலைக்கழிக்கப்பட்டுத் துன்ப நிலைக்குத் தள்ளப்படுகிறான். இன்றைய காலகட்டத்தில் ஆணுக்குப் பெண் சரிநிகர்சமானம் என்ற நிலை வந்து விட்டது. இருப்பினும் அவசர உலகில் வாழும் தலைவன், தலைவி அவசரமாக பிரிந்து விடுகின்ற அவல நிலையையும் நாம் காண முடிகிறது. மேலைநாட்டு கலாச்சார மோகத்தால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய தமிழர் பண்பாடு அழிந்து வருகிறது. மேலை நாடுகளை காட்டிலும் நமது நாட்டில் அதிக விவாகரத்துகள் (மண முறிவுகள்) நிகழ்வதாக கணக்கெடுப்பு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கு காரணம் பணம் மட்டுமே வாழ்க்கை என்ற ஒரு மனோநிலை மக்களுக்கு மத்தியில் நிலவிவருகிறது. பணத்தைச் சம்பாதிக்கும் வழிகளைத்தேடி செல்லும் மனிதனுக்கு வீட்டில் பெற்றோர்கள், மனைவி, மக்களிடையே அன்பு செலுத்த நேரம் ஒதுக்குவதில்லை. மேலும் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை நிலை, தியாக உணர்வு, போன்றவை அருகிவருவதே இதற்குக் காரணமாகும்.

## முடிவுரை

கற்பனை வளமும் கருத்துச் செறிவும் உணர்வூட்டும் திறமும் அறிவூட்டும் ஆற்றலும் சுவைப்படச் சொல்லும் நயமும் பெற்ற பண்டையத் தமிழர்களின் வாழ்க்கையில் இல்வாழ்கை முதலிடம் பெறுகிறது சங்ககாலம் தொட்டு இன்று வரை அதன் சிறப்பை அதன் சிறப்பை அறிய முடிகின்றது. மனையறம் புரி தலை மகளீரும் வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்வாழ்கை சிறந்து விளங்கியது மேலும் இல்வாழ்கையினை மேற்கொள்ளும் தலைவன் தன்னைச் சார்ந்தோரை பேணிப்பாதுகாக்கும் கடைமையுள்ளவனாகவும் இதன்னிடம் வந்து பொருள் இரந்து கேட்போருக்கு இல்லை யென்று கூறாமல் பொருள் கொடுத்து அவர்களின் வருமையைபோக்குவதே இல்லறத்தின் சிறந்த கடமையாகப் போற்றிவிட்டது. ஆனால் இன்று மக்களுடைய இயந்தரத்தனமான வாழ்க்கை முறையே இல்வாழ்கைக்குத் தடையாக உள்ளது. அறிவு அதிகமாகும் நிலையில் இன்று மனிதர்களின் மனவுணர்வுகள் குறைந்து வருவதை தமிழர்களாகிய நாம் போற்றிப் பாதுகாத்துச் செயல்பட வேண்டியது கடமையாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மக்களின் இல்வாழ்க்கை மாண்புடையதாக விளங்கியதை பண்டையத் தமிழ், இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இல்லறம் என்பது கணவன் மனைவி, இருவரும், இணைந்து ஒழுக்கத் தோடு வாழும் வாழ்க்கையாகும். இல்லறம் சிறப்பாக அமைந்து விட்டால் சமூகம் நல்லற மாகத்திகழும் என்பது திண்ணம் இல்லறத்தில் வாழும் ஒருவன் தேடிய பொருளைக் குடும்பத்தார்க்கும், சமுதாயத்தில் உள்ளவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்துதானும் உண்பதுடன் அச்சமுதாயமக்களிடையே நல்லுறவை வளர்ப்பதே இல்லறத்தின் நெறி என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகின்றது.

## References

Ilampuranar, (2015) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India

Jeyabal, R. (2004) Agananooru, New Century Book House, Chennai, India

Mathavan, R. (2001) Nanmanikadigai, Tamil University, Thanjavur, India.

Nagarasan, V. (2004) Kurunthogai, New Century Book House, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Swaminatha Iyer, U.V. (2014) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa Noolaga Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License